சுதந்திரத் திருநாள் அமுதப் பெருவிழா

தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்


**எண்.19, அரசு பண்ணை கிராமம், பேர்ன்பேட்டை, நந்தனம்,**
**(ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் பின்புறம்,**
**சென்னை - 600 035. தொலைபேசி எண்: 044-29515590**


**ஆணை நாள்: 05.01.2022**

**முன்னிலை**

**திரு ச. த. தமிழ்குமார், பி.ஏ., பி.எல்.,**
**மாநில தகவல் ஆணையர்**

...............

**வழக்கு எண்.SA3245/F/2020**

**திருமதி A. கல்பனா ... மேல்முறையீட்டாளர்**

**/ எதிர் /**

**பொதுத் தகவல் அலுவலர்/**
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**தாம்பரம் வட்டம்,**
**செங்கல்பட்டு மாவட்டம். ... பொது அதிகார அமைப்பு**

**பார்வை:-**

| | |
|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1) கீழ் மனு செய்த நாள் | **16.12.2019** |
| முதல் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(1) | **28.01.2020** |
| இரண்டாம் மேல்முறையீட்டு மனு நாள் - பிரிவு 19(3) | **14.03.2020** |
| ஆணையத்தின் ஆணை நாள் | **19.02.2021** |

******

## ஆணை

இவ்வழக்கு ஏற்கனவே SA3245/F/2020, 19.02.2021 நாளிட்ட ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 15 தினங்களுக்குள் முழுமையான தகவல்கள் வழங்கும்படி உத்தரவிடப்பட்டிருந்தது. இந்நிலையில் இவ்வழக்கு COVID-19 ஊரடங்கு காரணமாக (05.01.2022) அன்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இந்த விசாரணையில் மேல்முறையீட்டாளர் திருமதி A. கல்பனா ஆஜரானார் மற்றும் பொது அதிகார அமைப்பின் சார்பாக திருமதி/செல்வி நிர்மலா, பொதுத்

தகவல் அலுவலர்/ தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,வட்டாட்சியர் அலுவலகம், தாம்பரம் வட்டம், செங்கல்பட்டு மாவட்டம் ஆகியோர் பங்கேற்றனர்.

2. மேல்முறையீட்டாளர் 16.12.2019 தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச்சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில்,

- K. Elumalai, S/o. Kannan, Aged-85 years, Date of death 28/05/2005. Place of Death /Place of Birth: 71A/93, 4th Cross Street, Ranganathapuram, Tambaram-45, Registration No.009/2005/02/00399, Registration Date: 06/09/2005. இந்த இறப்பு சான்றை பயன்படுத்தி வாரிசு சான்று பெற்ற நபர்களின் விவரம் மற்றும் வாரிசு சான்று நகல் ஒன்று வழங்கவும்,

- K. Elumalai, S/o. Kannan, No. 71A/93, 4th Cross Street, Ranganathapuram, Tambaram-45, இந்த முகவரியில் வசித்து வந்த நபரின் பெயரில் கடப்பேரி கிராம நிர்வாக அலுவலகம் அல்லது தாம்பரம் VAO அலுவலகம் மூலமாகவோ தமிழ்நாடு அரசு இலவச வீட்டுமனை பட்டா வழங்கி இருப்பின் அதன் நகல் (1980 to 2010) வழங்கவும்,

- கடப்பேரி கிராம நிர்வாக சர்வே எண் 154/3ல் E.வெங்கடேசன் த/பெ ஏழுமலை மற்றும் E.எட்டியப்பன் த/பெ எழுமலை No. 71A/93, 4th Cross Street, Ranganathapuram, Tambaram-45, இந்த முகவரியில் உள்ள நபர்களின் பெயரில் பட்டா, சிட்டா, பெயர் மாற்றம் செய்து வழங்கியிருப்பின் அது எந்த ஆண்டு வழங்கப்பட்டது அதன் நகல் வழங்கவும்,

- K. ஏழுமலை, த/பெ கண்ணன், No. 71A/93, 4th Cross Street, Ranganathapuram, Tambaram-45, இந்த முகவரியில் வசித்து பரமகுடியாய் இருந்து கடந்த 28/08/2005 அன்று இறந்த போன நபர் பெயரில், ஏதேனும் வீட்டுமனை இருந்து இருப்பின் அதன் சர்வே எண் வழங்கவும் மற்றும் தற்பொழுது உள்ள உட்பிரிவு மற்றும் இன்றைய தேதியில் யார் பெயரில் பட்டா உள்ளது எட்டா எண் மற்றும் நகல் வழங்கவும்.

என்பது போன்ற தகவல்களை வழங்கக் கேட்டு விண்ணப்பித்துள்ளார்.

3. பொதுத் தகவல் அலுவலர் தகவல் வழங்காததால் மேல்முறையீட்டாளர் 28.01.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலர், வட்டாட்சியர், தாம்பரம் அவர்களுக்குத் தாக்கல் செய்துள்ளார். மேல்முறையீட்டு அலுவலரும் தகவல் வழங்காத காரணத்தால் மேல்முறையீட்டாளர் தான் கோரிய தகவலை வழங்க உத்தரவிடுமாறு கோரி 14.03.2020 தேதியிட்ட சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவை ஆணையத்திற்குத் தாக்கல் செய்துள்ளார். இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் அடிப்படையில் இவ்வழக்கு ஏற்கனவே SA3245/F/2020, 19.02.2021 நாளிட்ட ஆணை வாயிலாக பொதுத் தகவல் அலுவலரை 15 தினங்களுக்குள் முழுமையான தகவல்கள் வழங்கும்படி உத்தரவிடப்பட்டிருந்தது. இந்நிலையில் பொதுத் தகவல் அலுவலர் தகவல் ஏதும் வழங்காத காரணத்தால், இவ்வழக்கு COVID-19 ஊரடங்கு காரணமாக (05.01.2022) அன்று தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு வழக்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

.4. இன்றைய விசாரணையில் ஆஜரான மேல்முறையீட்டாளர் ஆணையத்தின் ஆணைக்குப் பிறகும் தனக்கு பொதுத் தகவல் அலுவலர் முழுமையான தகவல்கள்

வழங்கவில்லை என்று ஆணையத்தில் தெரிவித்தார். மேலும் முழுமையான தகவல்களை கூடிய விரைவில் வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு உத்தரவிடுமாறு கேட்டுக் கொண்டார்.

5. இன்றைய விசாரணையில் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மேல்முறையீட்டாளர் கோரிய தகவல்களை கூடிய விரைவில் வழங்குவதாக ஆணையத்தில் தெரிவித்தார்.

6. மேல்முறையீட்டாளரின் மனுவையும், பொதுத் தகவல் அலுவலர் வழங்கிய தகவலையும் இணைத்து பரிசீலனை செய்கையில் மேல்முறையீட்டாளருக்கு முழுமையான தகவல் வழங்கப்படவில்லை என்பது தெரிகிறது. எனவே, இன்றைய விசாரணையின் முடிவில் ஆணையம் கீழ்கண்ட உத்தரவு பிறப்பிக்கின்றது :-

- **மேல்முறையீட்டாளர் சட்டப்பிரிவு 6(1)-ல் ஆணையத்தின் ஆணைக்குப் பிறகும் முழுமையான தகவல் வழங்காத அப்போதைய பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம் 2005 பிரிவு 20(1)ன் கீழ் நாள் ஒன்றுக்கு ரூ.250/- வீதம் ரூ25,000/- தண்டம் ஏன் விதிக்கக்கூடாது என்பதற்கான அவரது எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஆணையத்திற்கு நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**
- **மேல்முறையீட்டாளர் 16.12.2019 தேதியிட்டு கோரிய தகவல்களை முழுமையான தகவல்களை இவ்வாணை கிடைக்கப் பெற்ற ஒரு வார காலத்திற்குள் ஒப்புதல் அட்டையுடன் கூடிய பதிவஞ்சல் வாயிலாக சட்டப்பிரிவு 7(6)-ன்படி கட்டணமின்றி அனுப்பிவைத்து, மேல்முறையீட்டாளர் பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டையின் நகல் மற்றும் வழங்கப்பட்ட தகவலின் நகலினை இணைத்து ஒரு அறிக்கையாகத் தயாரித்து இவ்வாணையத்திற்கு அப்போதைய பொதுத் தகவல் அலுவலருடன், தற்போதைய பொதுத் தகவல் அலுவலரும் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு தற்போதைய பொதுத் தகவல் அலுவலருக்கு ஆணையம் உத்தரவிடுகிறது.**
- **மேல்முறையீட்டாளர்** 16.12.2019 **தேதியிட்டு தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 6(1)-ன்கீழ் தாக்கல் செய்துள்ள மனுவில் கோரியுள்ள தகவலை வழங்கத் தவறும்பட்சத்தில் பொதுத் தகவல் அலுவலர் மீது தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, பிரிவு 20(1)-ன்கீழ் நடவடிக்கை எடுக்கப்படுமென்று ஆணையம் எச்சரிக்கின்றது.**

**ஒம்/- (ச.த. தமிழ்குமார்)**
மாநில தகவல் ஆணையர்

(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவி பதிவாளர்

**<u>வழக்கு எண். SA3245/F/2020</u>**
**பெறுநர்**
**தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,**
**வட்டாட்சியர் அலுவலகம்,**
**தாம்பரம் வட்டம்,**
**செங்கல்பட்டு மாவட்டம்.**

**<u>மனுதாரர்</u>**
**திருமதி A. கல்பனா,**
**நெ.266/1, 12வது தெரு,**
**பகுதி-II, சத்துவாச்சாரி,**
**வேலூர் 632 009.**

Copy to: Judgement File/ Spare.
JE/ PA-2022